RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 252 | செப்டம்பர்.13 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்... ஒசெ. முத்துராமலிங்கம், கிங் கார்த்திக், வாடிவாசல் முத்துவேல்செல்வம் பங்கேற்பு

சிவகங்கை. செப்.13

சிவகங்கை நகரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பு மக்கள் தொடர்பு முகாமில் சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம், மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் கிங் கார்த்திக், மாவட்ட ஐடி விங் துணை ஒருங்கிணைப்பாளர் வாடிவாசல் முத்துவேல்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று உரிய தீர்வினை தருமாறு அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்...

இதனிடையே முன்னதாக வருவாய் வட்டாட்சியர் மல்லிகார்ஜீனன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்பிரகாசம், ஜெகன்னாதசுந்தரம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர்கள் கவிதா , சக்திமீனாட்சி, வருவாய் ஆய்வாளர்கள் கணேசன், பிரபு, ஊராட்சி எழுத்தர்கள் முத்துக்குமரன் , முத்துப்பாண்டி, மகா, கிராம நிர்வாக உதவியாளர் சுருளிப்பாண்டி உள்ளிட்டோர் குத்துவிளக்கு ஏற்றி முகாமினைத் தொடங்கி வைத்தனர்...

இந்த நிகழ்ச்சியில் இளைஞரணி பையூர் சுகுமார், முத்து, தினேஷ் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## வேலூர் மாநகராட்சி சாய்நாதபுரத்தில் தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர். செப்.13

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சாய்நாதபுரம் தனியார் திருமண மண்டபத்தில்,

வேலூர் மாநகராட்சி 3வது மண்டலம், 51 மற்றும் 52 ஆகிய வார்டில் தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஜெயசங்கர் மகேந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இம்முகாமில் வேலூர் மாநகராட்சி 51, 52 வார்டுகளை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குறைகளுக்கான மனுக்களை துறை அலுவலர்களிடம் வழங்கினார்கள்

சாய்நாதபுரம் பகுதிய சார்ந்த முதியவர் ஒருவர் அளித்த மனுவுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு ஆணையினை வழங்கினர்.

## பாஜக அரசு மீனவர்கள் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்: செல்வப்பெருந்தகை

சென்னை: செப்.13-

இந்திய கடற்படை ரோந்து பணியை தீவிரப்படுத்தி மீனவர்களை பாதுகாக்க வேண்டும். ஒன்றிய பாஜக அரசு உடனடியாக தூதரக ரீதியில் நடவடிக்கை எடுத்து மீனவர்கள் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நாகப்பட்டினம், செருதூரை சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்க சென்ற போது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் செருதூரைச் சேர்ந்த மீனவர்கள் பலர் காயம் அடைந்துள்ளார்கள்.

மேலும் அவர்களின் வலை உள்ளிட்ட மீன்பிடி சாதனங்களை பறித்துச் சென்றுள்ளனர். இலங்கை கடற்கொள்ளையர்களின் கொடூரச் செயலுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருபக்கம் இலங்கை கடற்படையினர் மீனவர்களை கைது செய்யும் படலம் நடந்து கொண்டு இருக்க மற்றொரு பக்கம் இலங்கை கடற்கொள்ளையர்களும் மீனவர்களை தாக்கி அவர்களின் பொருட்களை திருடிச் செல்லும் அதிர்ச்சிகர சம்பவங்கள் நடைபெறுகின்றன. கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்கள் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. வாழ்வாதாரத்திற்காக உயிரை பணயம் வைத்து கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு கேள்வி குறியாகியுள்ளது.

இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீனவர்களை தாக்குவதோடு அவர்களிடம் இருந்து கொள்ளையடித்து செல்லும் இலங்கை கடற்கொள்ளையர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய கடற்படை ரோந்து பணியை தீவிரப்படுத்தி மீனவர்களை பாதுகாக்க வேண்டும். ஒன்றிய பாஜக அரசு உடனடியாக தூதரக ரீதியில் நடவடிக்கை எடுத்து மீனவர்கள் பிரச்சனையை முடிவுக் கொண்டு வரவேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# அரிய வகை கனிமங்களின் சுரங்கத் திட்டங்கள்: மத்திய அரசின் நகர்வுக்கு முதல்வர் ஸ்டாலின் கடும் எதிர்ப்பு

சென்னை: செப்.13-

அரிய வகை கனிமங்களின் அனைத்து சுரங்கத் திட்டங்களும் பொது மக்கள் கருத்துக் கேட்பின் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்டுள்ள அரசாணையை திரும்புப் பெறுமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில், “இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவால் 08.09.2025 அன்று (எண். IA-Z-11013/136/2025-IA-I) வெளியிடப்பட்டுள்ள அலுவலகக் குறிப்பாணையின் மீது கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அந்தக் குறிப்பாணையின் மூலம், முக்கியமான மற்றும் அரிய வகை கனிமங்களின் அனைத்து சுரங்கத் திட்டங்களும் பொது மக்கள் கருத்துக் கேட்பின் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன என்றும், மேலும், அத்தகைய அனைத்துத் திட்டங்களும் சம்பந்தப்பட்ட குத்தகைப் பகுதியின் அளவைக் கருத்தில் கொள்ளாமல், ஒன்றிய அளவில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் கடற்கரை மணல் அமைப்புகளில் படிந்துள்ள அரிய மண் கனிம கூறுகளின் படிவுகளைக் கொண்டுள்ளன. இந்தக் கடற்கரைகள் சுற்றுச்சூழல் ரீதியாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவை. மன்னார் வளைகுடா மற்றும் பாக் விரிகுடாவின் மணல் கடற்கரைகள் அழிந்து வரும் ஆமைகளின் இனப்பெருக்கம், பவளப்பாறைகள், சதுப்பு நிலங்கள் மற்றும் மணல்



திட்டுகளுக்கு தாயகமாக உள்ளன என்றும், அவை கடலரிப்பு மற்றும் சூறாவளி நிகழ்வுகளுக்கு எதிராக இயற்கைக் கேடயங்களாகச் செயல்படுகின்றன.

மேலும், இந்தச் சுற்றுச்சூழல் அமைப்புகள் பல்லுயிரியலை நிலைநிறுத்துகின்றன; கரையோரங்களை உறுதிப்படுத்துகின்றன; கார்பனை பிரித்தெடுக்கின்றன மற்றும் கடல் அரிப்பிலிருந்து சமூகங்களைப் பாதுகாக்கின்றன. இத்தகைய பகுதிகளில் சுரங்கம் என்பது இயல்பாகவே சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கொண்டது. எனவே, உள்ளூர் சமூகங்களின் முழுமையான ஈடுபாட்டுடன் கடுமையான ஆய்வு தேவைப்படுகிறது.

1997ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 1994ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிவிப்பு, கட்டாய பொது மக்கள் கருத்துக் கேட்புகளை அறிமுகப்படுத்தியது. இந்தப் பங்கேற்பு சுற்றுச்சூழல் நிர்வாகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறி, ஒரு மைல்கல்லாகத் திகழ்கிறது. இந்தப் பாதுகாப்பு 2006ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிவிப்பில் வலுப்படுத்தப்பட்டது. பொது மக்கள் கருத்துக் கேட்பிருந்து



திட்டங்களுக்கு விலக்கு அளிப்பது என்பது, வாழ்வாதார இழப்பு, இடப்பெயர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் தொடர்பான நியாயமான கவலைகளை எழுப்பும் உள்ளூர் சமூகங்களின் உரிமையைப் பறிக்கும். இது மக்கள் பங்கேற்கும் ஜனநாயகத்தின் கொள்கைகளை பலவீனப்படுத்தும் .

ஒன்றிய அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்தக் குறிப்பாணை, கடுமையான சட்டரீதியான கவலைகளையும் எழுப்புகிறது. தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கடந்த காலங்களில் சட்டப்பூர்வ பாதுகாப்புகளை நீர்த்துப்போகச் செய்யும் இத்தகைய அலுவலகக் குறிப்பாணைகளை ரத்து செய்துள்ளது. Alembic Pharmaceuticals Ltd. v. Rohit Prajapati & Ors. (2020) வழக்கில், உச்ச நீதிமன்றம், அலுவலகக் குறிப்பாணைகள் போன்ற நிர்வாக அறிவுறுத்தல்கள் மூலம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) கட்டமைப்பில் கணிசமான திருத்தங்களைக் கொண்டு வரமுடியாது. அத்தகைய கருவிகள் சட்டப்பூர்வ அறிவிப்புகளை மீற முடியாது.

மேலும், தற்போதைய அலுவலகக் குறிப்பாணை பொது மக்கள் கருத்துக் கேட்பிற்கு வழிவகுக்காமல், அனுமதிக்க முடியாத நிர்வாகச் சட்டத் திருத்தத்திற்குச் சமமாக உள்ளது. எனவே இது நிலைக்கத்தக்கதல்ல. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை மாற்றங்கள் நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டும். மாநில அரசுகள் மற்றும் பொதுமக்களின் உரிய ஆலோசனையுடன் செய்யப்பட வேண்டும்.

மேற்கூறிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் வெளியிடப்படும் இத்தகைய அறிவிப்புகள் கூட்டாட்சி உணர்வுக்கும், நமது நாட்டின் மக்களாட்சி நெறிமுறைகளுக்கும் எதிரானதாக இது அமையும். இவற்றைக் கருத்தில் கொண்டு, 08.09.2025 நாளிட்ட அலுவலகக் குறிப்பாணையை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு ஒன்றிய அரசை தான் வலியுறுத்துவதாகவும், கடந்த காலங்களில் எப்போதும் செய்யப்பட்டது போல, நாட்டின் முன்னேற்றத்திற்கு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு பங்களிப்பதற்கான தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை இத்தருணத்தில் மீண்டும் தான் வலியுறுத்த விரும்புகிறேன்” என்று அந்தக் கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் தொடங்கியது மகளிர் சுய உதவிக் குழுக்களின் நவராத்திரி விற்பனை கண்காட்சி!

சென்னை: செப்.13-

சென்னை வள்ளுவர்கோட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் நவராத்திரி விற்பனை கண்காட்சி நேற்று (செப்.12) முதல் வரும் அக்.5 ம் தேதி வரை நடைபெறுகிது. கண்காட்சியை ஊரக வளர்ச்சித் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி நேற்று காலை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

நவராத்திரியை முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி மதி விற்பனை கண்காட்சி, சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தொடங்கியது. இந்த கண்காட்சியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி தொடங்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களை பார்வையிட்டார்.




அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், “மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தும் விதமாக, அவர்களது தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்யும் வகையில் 24 நாட்கள் கொண்ட கண்காட்சியை தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்த கண்காட்சி அக்.5ம் தேதி வரை நடைபெறும். தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்கள் கண்காட்சியை இலவசமாக பார்வையிட்டு தங்களுக்கு தேவையான மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான பொருட்களை வாங்கிச் செல்லலாம்.

இந்த கண்காட்சியில் ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள சுய உதவிக் குழுக்கள் தயாரித்த, அந்தந்த மாவட்டத்தின் சிறப்பு மிக்க பொருட்கள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் சென்னையில் கிடைக்காத, தாங்கள் விரும்பும் பல்வேறு மாவட்ட பொருட்களை ஒருசேர ஒரே இடத்தில் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பெரு நிறுவனங்களில் பலருக்கு பரிசு கொடுக்க வேண்டும் என்றாலும், அதற்கான கிஃப்ட் பாக்ஸ்களும் இங்கு கிடைக்கும். அதேபோல் பெரியளவிலான ஆர்டர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

கண்காட்சியில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளான நவராத்திரி கொலு பொம்மைகள், குத்து விளக்குகள், பட்டு, பருத்தி ஆடைகள், செயற்கை ஆபரணங்கள், கைவினை பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், தோல் பொருட்கள், மரச் சிற்பங்கள், மூலிகை பொருட்கள் உள்ளிட்டவை 46 அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்துடன் அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென 5 அரங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆர்.வி.ஷஜீவனா, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் ஆஷா அஜித் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பகுதியில் அதிமுக எழுச்சி பயணம் மேற்கொண்ட முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி

திருப்பூர், செப்.13-

அதிமுக கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தற்போது தமிழக முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார் இதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டம் தாராபுரம், காங்கேயம், மடத்துக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் பொது மக்களிடையே உரையாற்றினார் அப்போது திமுக ஆட்சி காலத்தில் திருப்பூர் மாவட்டத்திற்கு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தவில்லை இது அதிமுக ஆட்சி காலத்தில் தான் ஒட்டன்சத்திரம் முதல் அவிநாசி பாளையம் வரை நான்கு வழி சாலை திட்டம் அமைக்கப்பட்டது அது மட்டும் இன்றி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான உப்பாறு அணைக்கு அமராவதி அணையில் இருந்து நீர் வருவதற்கு நிரந்தரமாக தீர்வு காணப்படும் மற்றும் மூலனூர் பகுதியில் முருங்கைக்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும் உள்ளிட்ட பல பொதுமக்களின் கோரிக்கைகளை அதிமுக ஆட்சி 2026 இல் அமைந்த பின் நிறைவேற்றித் தரப்படும் என உறுதி அளித்தார்

தாராபுரம் நகரக் கழக செயலாளர் சி.ராஜேந்திரன், திருப்பூர் கிழக்கு மாவட்ட இணை செயலாளர் திருமதி சத்தியபாமா அவர்கள், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட அமைப்பாளர் பங்கு மகேஷ், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் ணிஙி பழனி குமார், மாவட்ட பிரதிநிதி லிட்டில் ராஜேந்திரன், நகர மகளிர் அணி செயலாளர் திருமதி கெளரி சித்ரா ,தாராபுரம் நகர இளைஞரணி செயலாளர் தினேஷ்குமார், திருப்பூர் புறநகர் மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் ஜகிர் அப்பாஸ் மற்றும் கட்சியை நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் எனப்பெருந்தருளாக கலந்து கொண்டனர்.



# கோவை மருதமலையில் வனசரக ஊழியர்களுக்கு மலைக்கோட் வழங்கிய அகில பாரத மக்கள் கட்சி

கோவை, செப்.13-

கோவை மருதமலை பகுதியில் ராஷ்ட்ரிய சனாதன சேவா சங்கம் பிராமின் அசோசியேஷன் மற்றும் அகில பாரத மக்கள் கட்சியின் சார்பாக கோயம்புத்தூர் வனச்சரகம் மருதமலையில் யானைகளை விரட்டும் பணியில் ஈடுபடும் வன காவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குளிர் மற்றும் மழை காலத்தை கருத்தில் கொண்டு நிறுவன தலைவர் முனைவர் எஸ் .ராமநாதன் தலைமையில் ஜெர்க்கின் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இது குறித்து ராமநாதன் கூறுகையில் ஜெர்கின் காலனிகள் மற்றும் டார்ச் லைட் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க உள்ளோம் முதற்கட்டமாக ஜெர்கின் வழங்கப்பட்டுள்ளது. என்றார். மேலும் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பிளாஸ்டிக் கழிவுகளை வனப்பகுதியில் போடாமல் ஆங்காங்கே வைத்துள்ள குப்பைத்தொட்டியில் இடுமாறு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ராஷ்ட்ரிய சனாதன சேவா சங்கம் (பிராமின் அசோசியேஷன்) மற்றும் அகில பாரத மக்கள் கட்சி கோவை மாவட்ட தலைவர் சேகர், கோவை மாவட்ட துணைத்தலைவர் நாராயணசாமி ,

கோவை மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன், கோவை மாவட்ட ஊடகப்பிரிவு தலைவர் நாகராஜ் மற்றும் மகேஷ் , மோகன் கோயமுத்தூர் வன உயிரின பாதுகாப்பு அறக்கட்டளையின் செயலாளர் ப சண்முகசுந்தரம் மற்றும் வன பணியாளர்கள் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காமாரஜபுரம் பேருந்து நிலையம் அருகில் தியாகி இமானுவேல் சேகரன் நினைவேந்தல் நிகழ்ச்சி

தாம்பரம், செப்.13-

சுதந்திர போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களின் 68ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி காமராஜபுரம் பேருந்து நிலையம் அருகில் தேவேந்திர குல வேளாளர் பொது நல சங்கம் சென்னை சார்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் லயன் டாக்டர் சிவகுமார் தலைமையில், நடைபெற்றது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக திரைப்பட நடிகை சமூக சிந்தனையாளர் கஸ்தூரி அவர்கள் கலந்து கொண்டு தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தலைவர் பாலமுருகன் மற்றும் இன்பநேசன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் திரிசூலம் பஞ்சாயத்து முன்னாள் தலைவர் சரஸ்வதி ஜெய்சங்கர்



பொது மக்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கி அன்னதானம் வழங்கினார். இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் தேவ அருள் பிரகாஷ் அவர்கள் கலந்துகொண்டு தியாகி இமானுவேல் சேகரன் பற்றி பொது மக்களுக்கு விளக்கி பேசினார் ஆவடி கே.ராஜேந்திரன் படத்தை திறந்து வைத்து மரியதை செலுத்தினார். நிகழ்ச்சியில் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அநேகர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் நிரைவில் பெரியசாமி நன்றி உரையாற்றினார்.

# டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற கோவை கார்மேல் கார்டன் பள்ளி முதல்வருக்கு பாராட்டு விழா

கோவை, செப்.13-

பள்ளி கல்வித்துறை சார்பில் சென்னை நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட கோவை கார்மல் கார்டன் மேல்நிலை பள்ளி முதல்வர் ஆரோக்கிய ததேயூஸ் அவர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்....




அதனைத்தொடர்ந்து விருதுபெற்ற கார்மல் கார்டன் பள்ளி முதல்வர் ஆரோக்கிய ததேயூஸ் அவர்களுக்கு பள்ளியின் நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது....

கோவை புலியகுளம் பகுதியில் இயங்கி வரும் கார்மல் கார்டன் பதின்ம மேல்நிலை பள்ளியின் முதல்வர் மற்றும் தாளாளர் முனைவர் அருட்தந்தை ஆரோக்கிய ததேயூஸ் அவர்களுக்கு நல்லாசிரியர் விருது பெற்றதை கொண்டாடும் வகையில் பாராட்டு விழா பள்ளியின் கூட்டரங்கில் நடைபெற்றது

இது குறித்து பள்ளியின் முதல்வர் ததேயூஸ் கூறியதாவது டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதை பெற்றது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது... கல்வி துறைக்கும் கல்வி பணிக்கும் நான் ஆற்றிய பணி மிக மிக நன்று என்று உணர்கிறேன் இது ஒரு அடையாளம் இந்த அடையாளத்தை மேலும் வழுப்படுத்த அனேக பணிகளை மாணவர் சமுதாயத்திற்கு செய்ய விரும்புகிறேன் என்றார். மேலும் எனக்கு விருது வழங்கிய தமிழக அரசு துணை முதல்வருக்கும் பள்ளிக்கல்வித்துறை கற்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். என்னை பரிந்துரை செய்த மாவட்ட பள்ளி கல்வி துறைக்கு கார்மல் கார்டன் பள்ளி நிர்வாகம் சாா்பாகவும் எனது சார்பாகவும் நன்றிகளை உரித்தாக்குகிறேன். என்னை வழிநடத்திய மேதகு ஆயர்கள் குருக்கள், முன்னாள் மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்களும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினர்களாக மறை மாவட்ட மேதகு ஆயர் தாமஸ் அக்குவினாஸ், முதன்மை குரு பேரருட் ஜான் ஜோசப் தானிஸ் அடிகளார் மற்றும் சிறப்பு விருந்தினராக புனிதா அந்தோனியம்மாள், ஓய்வு பெற்ற ஆசிரியர் ஜோ.தன்ராஜ், முன்னாள் மாணவர்கள் சங்க தலைவர் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புறையாற்றி சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்

நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆசிரியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்



# திருப்பூர் மாநகராட்சி அதிரடி நடவடிக்கை: மாசு ஏற்படுத்தும் கழிவுகளை சாக்கடையில் கலந்த தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை

திருப்பூர், செப்.13-

திருப்பூர் மாநகராட்சி நிர்வாகம் மண்டலம் இரண்டு. நிர்வாகத்தில் ஆய்வு செய்து போது. வார்டு 8 கங்கா நகர் பிரதான சாலையில் உள்ள .தனியார் பனியன் தொழில் நிறுவனத்தை சார்ந்த தொழிற்சாலை நிறுவனத்தில் இருந்து பிரதான சாலையில் உள்ள பாதாள சாக்கடையில் மாநகராட்சியின் முன் அனுமதி எதுவும் பெறாமல் விதிகளுக்கு மாறாக மாநகராட்சி சாலைகளை சேதப்படுத்திய இது போன்ற குறைபாடுகளை கண்டறியப்பட்டு அந்த தொழிற்சாலை இணைப்புகளை துண்டிக்கப்பட்டு அந்த தனியார் நிறுவனத்தின் மீது மாநகராட்சி ஒரு லட்ச ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டது. தொகையை வசூலிக்கப்பட்டது. என்பதை மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



காவல்துறை அறிவிப்பு

அடையாளம் பெயர் விலாசம் தெரியாத நபர்

பழனி நகர் காவல்நிலைய குற்ற எண். 548/25 U/S 194 BNSS (Unknow)

பெயர் : தங்கச்சாமி
த/பெயர் : தெரியவில்லை
வயது : 43/25
நிறம் : மாநிறம்
உயரம் : சுமார் 4½ அடி
முகவரி : தெரியவில்லை

அங்க அடையாளம் :
1. இடது பக்க வயிற்றில் கருப்பு மச்சம்
2. நடுநெற்றியில் காயத்தழும்பு

உடுத்தியிருந்த உடை :
1. பச்சை கலர் டவுசர்

09.09.2025-ம் தேதி இரவு 8.30 மணிக்கு தங்கச்சாமி என்பவர் மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்து விட்டார் பிரேதம் பழனி அரசு மருத்துவமனையில் உள்ளது. இவரை பற்றி தகவல் தெரிந்தால் காவல்துறைக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இறந்தவரைபற்றி தகவல் தெரிந்தால் தெரிவிக்க வேண்டிய முகவரி, தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் பழனி உட்கோட்டம், பழனி, திண்டுக்கல் மாவட்டம். | 94981 01524 |
| காவல் ஆய்வாளர் பழனி நகர் காவல் நிலையம் | 98947 96690 |
| சார்பு ஆய்வாளர் பழனி நகர் காவல் நிலையம் | 97861 39381 |
| பழனி நகர் காவல் நிலையம் | 94981 01552 |

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தென்காசி, செப்.13-

தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அறிய தொண்டாற்றி வருகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாளன்று ''டாக்டர்.அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது'' வழங்கி சிறப்பித்து வருகிறது. 20252026 ஆம் நிதியாண்டில் டாக்டர் அம்பேத்கர் விருது பெறுவோருக்கு ரூ.5,00,000/ (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) விருதுத்தொகையும். 8 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.1,20,000/ (ரூபாய் ஒரு இலட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) சேர்த்து ஆக மொத்தம். ரூ. 6,20,000/(ரூபாய் ஆறு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) வழங்கப்படவுள்ளது.

மேற்படி விருது பெறுவதற்கு பட்டியலின சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலையினை உயர்த்துவதற்கு முயற்சி மேற்கொண்டவராகவும், பட்டியலின மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் சாதனைகள் ஆகிய விவரங்கள் அதற்குரிய ஆதராங்களுடன் மாவட்ட ஆட்சியர் ஆலுவலகத்திலுள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் நேரில் 2025 அக்டோபர் 10க்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இவ்விருதினை பெறுவதற்கு பட்டியல் இனத்தவர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



# காரமடை குட்டையூர் மாதேஸ்வரன் கோவில் திருப்பணிக்காக ரூபாய் 10 இலட்சம் நன்கொடை

கோவை, செப்.13-

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே காரமடை குட்டையூர் அருள்மிகு மாதேஸ்வரன் திருக்கோயில் திருப்பணிக்காக ரூபாய் 10 இலட்சம் நன்கொடையை கோவை மாவட்ட அறங்காவலர் நியமன குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம், திமுக ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம் ஆகியோர் கோவில் நிர்வாகிகளிடம் திமுக வடக்கு ஒன்றிய அலுவலகத்தில் வழங்கினார்கள்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்கள் ஜெர்மன் மொழி தேர்வுக்கான பயிற்சி பெறுவதற்கு, இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.13-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்களை வழங்கி வருகிறது.




அதனடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ஜெர்மன் மொழி தேர்வுக்கான பயிற்சி (German Language Test Training) வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி பெறுவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராகவும், பி.எஸ்.சி நர்சிங் (B.Sc Nursing), பொது நர்சிங் மற்றும் மருத்துவச்சி டிப்ளமோ (GNM Diploma), பி.இ (மெக்கானிக்கல் இன்ஜினியரிங்), பி.இ (பயோ மெடிக்கல் இன்ஜினியரிங்), பி.இ (மின் மற்றும் மின்னணு பொறியியல் (EEE) - பி.டெக், தகவல் தொழில் நுட்பம் (B.Tech IT) ஆகிய படிப்புகளில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 21 முதல் 35 வயதிற்குட்பட்டவராகவும், குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 லட்சத்திற்கு மிகாமலும் என்ற விதிமுறைகளுக்குட்பட்டு இருத்தல் வேண்டும். மேலும், இப்பயிற்சிக்கான ஒன்பது மாத கால அளவு, விடுதியில் தங்கி படிப்பதற்கான செலவினத் தொகை தாட்கோ சார்பில் வழங்கப்படும்.

இப்பயிற்சி முடித்தவுடன் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக தேர்வு செய்து, அந்நிறுவனத்தின் சார்பாக ஜெர்மனி நாட்டில் பணிபுரிய ஆரம்பகால மாத ஊதியமாக ரூ.2,50,000/ முதல் ரூ.3,00,000/ வரை வருவாய் ஈட்டிடும் வகையில் வேலை வாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படும்.

எனவே, ஜெர்மன் மொழி தேர்வுக்கான பயிற்சி (German Language Test Training) பெற விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்கள் தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற இணையதள முகவரியின் வாயிலாக உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

# வேப்பனஹள்ளியில் மழையால் உழவு பணிகள் தீவிரம்

வேப்பனஹள்ளி, செப்.13-

வேப்பனஹள்ளி பகுதியில் கடந்த மூன்று நாட்களாக தொடர் மழை பெய்து வந்தது. இதனால், நீரின்றி வறண்டு காணப்பட்ட வயல்வெளிகளில், தண்ணீர் தேங்கியது.

இதைத் தொடர்ந்து விவசாயிகள் தற்போது சோளம், கொள்ளு, துவரை ஆகிய பயிர்களை விதைப்பதற்காக நிலத்தை சமன் படுத்துதல், ஏர் உழுதல் போன்ற பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல், போதிய மழையின்றி வாடிக்கொண்டிருந்த நிலக்கடலை பயிர்களும், தற்போது பெய்த தொடர் மழையால் துளிர்க்க ஆரம்பித்துள்ளன. மழையின் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.



## உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் மாங்குடி குடஞ்சாடி தெற்குவாடி வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்பிரகாசம், கிளைச்செயலாளர் கரு.மார்கண்டேயன் பங்கேற்பு

சிவகங்கை, செப்.13-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் மாங்குடி தெற்குவாடி , குடஞ்சாடி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி மாங்குடியில் உங்களுடன் ஸ்டாலின் எனும் மாபெரும் மக்கள் தொடர்பு சிறப்பு முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்பிரகாசம், ஜெகன்னாதசுந்தரம் , மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கவிதா, சக்திமீனாட்சி ஆகியோர் கலந்து கொண்டு முகாமினை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

திமுக கிளைக்கழக செயலாளர் , கூட்டறவு சங்க முன்னாள் தலைவர் கரு. மார்கண்டேயன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த சிறப்பு முகாமில் மாங்குடி திமுக செயலாளர் தென்னரசு, எறும்புகுடி அண்ணாத்துரை, கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி, ஊராட்சி எழுத்தர்கள் முத்துப்பாண்டி, சுகுமார் , வீரவலசை மூர்த்தி , நிர்வாக உதவியாளர் ராஜா , மக்கள் நலப் பணியாளர் சங்கர்கணேஷ், அர்ஜுன் உள்ளிட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின் " முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தென்காசி, செப்.13-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சி வார்டு எண் 6,7 ஆகியவற்றிற்கான முகாம் சிந்தாமணி தெலுங்கு யாதவர் திருமண மண்டபத்திலும், குற்றாலம் பேரூராட்சி வார்டு எண் 8,15 ஆகியவற்றிற்கான முகாம் குற்றாலம் பார்க் ரோடு பேரூராட்சி சமுதாய நலக்கூடத்திலும், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் உள்ளார் தளவாய்புரம், சங்குபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கான முகாம் தளவாய்புரம் சேவை மையத்திலும் நடைபெறவுள்ளது. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் ஆண்டிப்பட்டி ஊராட்சிக்கான முகாம் கரும்பனூர் சமுதாய நலக்கூடத்திலும், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் பழங்கோட்டை ஊராட்சிக்கான முகாம் பழங்கோட்டை சமுதாய நலக்கூடத்திலும், சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றியம் பெருமாள் பட்டி ஊராட்சிக்கான முகாம் பெருமாள்பட்டி பொட்டல் பூமாரியம்மன் கோவில் வளாகத்திலும் நடைபெற்றது.

மேலும், 16.09.2025 அன்று சுரண்டை நகராட்சி வார்டு எண் 25, 26, 27 ஆகியவற்றிற்கான முகாம் கீழ சுரண்டை குறிஞ்சி மயில் மண்டபத்திலும், புதூர் பேரூராட்சி வார்டு எண் 8, 15 ஆகியவற்றிற்கான முகாம் பேரூராட்சி சமுதாய நலக்கூடத்திலும், கடையம் ஊராட்சி ஒன்றியம் மந்தியூர் ஊராட்சிக்கான முகாம் இராமலிங்கபுரம் சமுதாய நலக்கூடத்திலும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் புதுக்குடி ஊராட்சிக்கான முகாம் எஸ்.எஸ்.கிராண்ட் மஹாலிலும், மேல நீலித நல்லூர் ஊராட்சி ஒன்றியம் குருக்கள் பட்டி ஊராட்சிக்கான முகாம் குருக்கள்பட்டி ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்திலும், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சுப்பிரமணியபுரம் ஊராட்சிக்கான முகாம் சுப்பிரமணியபுரம் சேவை மையத்திலும் நடைபெறவுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்தி பயன்பெற வேண்டும். இந்த ஆய்வின் போது அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.85 கீரைத்துறை பகுதியில் பாம்பன் சுவாமி கல்யாண மகால் கட்டுவதற்கான பூமி பூஜை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூமிநாதன் அவர்கள், ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது அருகில் மாமன்ற உறுப்பினர் திருமதி.முத்துமாரி அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மதுரை மாவட்டத்தைச் சார்ந்த அரசு அலுவலகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

மதுரை, செப்.13-

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த அரசு அலுவலகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் களுக்கான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், சென்னை அரசு முதன்மை செயலர்(நிதித்துறை) மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள்குறை தீர்க்கும் கூட்ட அரங்கில் வருகிற 19.09.2025ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடத்தப்பட உள்ளது.

ஓய்வூதியதாரர்கள் தங்களுடைய ஓய்வூதிய பலர்கள் பெறுவதில் உள்ள குறைகளைக் குறிப்பிட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கீழ்கண்ட விபரக் குறிப்புகளுடன், 09.09.2025ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மனுவின் மீது ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மனு என்று குறிப்பிட வேண்டும்.

3. விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கண்டிப்பாக இரு நகல்கள் அனுப்பப்பட வேண்டும்.

2. ஓய்வூதியர் பெயர் (குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்தால் உறவுமுறை) குறிப்பிடப்பட வேண்டும்.

3. ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வந்தால் அவை சம்பந்தமான விபரம் ஓய்வூதிய புத்தக எணி மற்றும் கருவூலத்தின் பெயர் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

4. ஓய்வூதியப் பிரேரணை சென்னை மாநில கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருந்தால் அதன் விபரம் குறிப்பிடப்பட வேண்டும்.

5. ஓய்வூதிய பலன்கள் பெறுவது தொடர்பான கோரிக்கைகளை மட்டும் தெரிவித்து விண்ணப்பிக்கவும், கோரிக்கையின் விபரம் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

6. ஓய்வூதியதாரர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய அலுவலர் மற்றும் அலுவலகத்தின் முழு முகவரி, தொலைபேசி எண்ணுடன் தெளிவாக குறிப்பிட வேண்டும்.




மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். பிற மாவட்டங்களைச் சார்ந்த அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள், அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசு துறைகளிலிருந்து ஓய்வூதியப் பிரேரணை அனுப்புவதில் ஏற்படும் தாமதம் மற்றும் கருவூலங்களில் ஓய்வூதியம் பெறுவதில் உள்ள பிரச்சனைகள் தொடர்பாக விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் விவாதித்து அரசு முதன்மை செயலர் (நிதித்துறை), சென்னை மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் மதுரை மாவட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஓய்வூதியர்களின் குறைகளை 19.09.2025ல் களைய உள்ளார்கள். எனவே, இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து ஓய்வூதியர்களும் அன்றைய தினம் நடைபெறவுள்ள கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.





## தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம் 65வது வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

### மேயர் வசந்தகுமாரி, மண்டல தலைவர் எஸ்.இந்திரன் ஆகியோர் பங்கேற்ப்பு

தாம்பரம், செப்.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம், 65வது வார்டு சார்பில் பாரத் பொறியல் கல்லூரி அருகில் உள்ள பழனி திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் ஆலோசனைப்படி உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, 5வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் கலந்து கொண்டு துவக்கி வைத்து பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் தாம்பரம் கிழக்கு பகுதி செயலாளர் ஏ.நடராஜன், மாநகர துணை செயலாளர் பொன்.சதாசிவம், சாம்சன் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## கனிமவள துறை அமைச்சரின் மாவட்டத்திலேயே கனிமம் கொள்ளை: பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு



புதுக்கோட்டை, செப்.13-

கனிமவள துறைக்கான அமைச்சரின் புதுக்கோட்டை மாவட்டத்திலேயே கனிம வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் நேற்று இரவு நடைபெற்ற 'உள்ளம் தேடி, இல்லம் நாடி' எனும் தேமுதிகவின் பிரச்சார பயணத்தில் அவர் பேசியதாவது: தேமுதிக பிரச்சாரக் கூட்டத்தில் மக்கள் கலந்துகொள்ளக் கூடாது என்பதற்காக அறந்தாங்கியில் நீண்ட நேரமாக மின் தடை செய்யப்பட்டுள்ளது. இதையெல்லாம் செய்வீர்கள் என்று தெரிந்ததால்தான், பிரச்சார வாகனத்திலேயே மின் விளக்கு, ஒலிபெருக்கி வசதியை ஏற்படுத்தி உள்ளோம். தேமுதிகவைப் பார்த்தாலே திமுகவுக்கு பயம் வருகிறது. கடைகோடி தொண்டன் உள்ள வரை கட்சியை யாரும் அசைக்க முடியாது. கனிம வளத்துறை அமைச்சரின் புதுக்கோட்டை மாவட்டத்திலேயே கனிம வளக்கொள்ளை அதிகமாக நடக்கிறது.மக்களுக்கு துரோகம் செய்பவர்கள் காணாமல் போவார்கள். தேமுதிக ஒரு முறை ஆட்சிக்கு வந்தால், அதன் பிறகு 50 கட்சிகள் கூட்டணி சேர்ந்து வந்தாலும் அசைக்க முடியாது. அந்த அளவுக்கு மக்களுக்கான திட்டங்கள் இருக்கும். வரும் தேர்தலில் தேமுதிகவுக்கு மக்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், கட்சியின் பொருளாளர் எல்.கே.சுதீஷ், இளைஞரணி செயலாளர் விஜயபிரபா கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தென்காசி, செப்.13-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தென் மாவட்டத்திற்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்களுக்குத் தேவை யான வளர்ச்சித்திட்டங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க அறிவுறுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சியில் வளர்ச்சித்திட்டப் பணிகளையும், அய்யாபுரம் பூங்காவில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளையும், அரசு மருத்துவமனையில் மருந்துகளின் இருப்பு மற்றும் தரம், அடிப்படை வசதிகள் குறித்தும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நாகை மாவட்டத்தில் 1.56 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய இலக்கு

நாகப்பட்டினம், செப்.13-

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.காவிரி டெல்டா மாவட்ட பாசனத்திற்காக கடந்த ஜூன் மாதம் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து முதல்வர் தண்ணீர் திறந்து விட்டார். இதனைத் தொடர்ந்து டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடியில் விவசாயிகள் ஈடுப்பட்டனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் 24 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.



ஆனால் இலக்கை தாண்டி 32 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டது. மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் தற்போது குறுவை அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. குறுவை அறுவடை பணிகள் நடந்து முடிந்த இடங்களில் விவசாயிகள் சம்பா சாகுபடி பணியில் விவசாயிகள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். இதன் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் ஆரகே காக்கழனியில் நேரடி நெல் விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நெல் விதைகளை வாழை இலையில் வைத்து தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி இயற்கை மற்றும் சூரிய பகவானை வழிப்பட்டனர். விவசாயம் செழிக்கவும், இயற்கை பேரிடர்களில் இருந்து பயிர்களை காப்பற்றவும் வேண்டி கொண்டனர். தொடர்ந்து விதை நெல்லை வயலில் தெளித்தனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அவ்வப்போது மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சம்பா சாகுபடி பணிகள் மேற்கொள்ள இந்த மழை மிகவும் உகந்ததாக இருக்கும் என தெரிவித்தனர்.

அதே நேரத்தில் உரம், பூச்சி மருந்து ஆகியவை தட்டுப்பாடு இன்றி கிடைக்க வேண்டும் என விவசாயிகள் கூறினர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 1.56 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்தில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் குறுவை சாகுபடி போல் சம்பா சாகுபடியும் இலக்கை தாண்டி சாகுபடி செய்ய விவசாயிகள் முனைப்புடன் செயல்படுகின்றனர்.



# வேலூர் அடுத்த விருதம்பட்டில் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயில் கும்பாபிஷேகம்

வேலூர், செப்.13-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, விருதம்பட்டு, பெருமாள் கோயில் தெரு, அருள்மிகு ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயில் கும்பாபிஷேக விழா நகர நாட்டாமை சி. ஹரிகிருஷ்ணன், நகர பொருளாளர் டாக்டர். வி.வி. மகேஷ்குமார், நகர தர்மகர்த்தா ஆர்.சந்துரு, நகர சொல்வது கே.ராஜேஷ்கண்ணா ஆகியோர் தலைமையிலும், பொதுமக்கள், இளைஞர்கள் முன்னிலையிலும் கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், கலவை தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள், காட்பாடி தவத்திரு வாராஹி யாக ரிஷஷி குருஜி சுவாமிகள் ஆகியோர் யாக பூஜையில் கலந்து கொண்டு சிறப்பு பூஜைகள் செய்து சிறப்பித்தனர். இதில் திரளான தொழிலதிபர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், ஆன்மீக அமைப்புகளின் தலைவர்கள், ஆலய நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவை சிறப்பித்தனர்.

# சோழிங்கநல்லூர் 199வது வட்டம்" அரசினர் மேல்நிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்"



சோழிங்கநல்லூர், செப்.13-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, இடம் : சென்னை மாநகராட்சி 15 மண்டலம், அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ராஜீவ் காந்தி சாலை, ஓ.எம்.ஆர்.ரோடு, ஆவின் அருகில், பகுதி 44, வார்டு 199,( செப்டம்பர் : 11) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 199 வது மாமன்ற உறுப்பினர், ஜி. சங்கர் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், எம் .எல்.ஏ, பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை வாங்கி துறை சார்ந்த அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் தன்னார்வலர்கள் மனுக்களை பூர்த்தி செய்து கொடுத்தனர் .முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மக்களுக்கு சான்றிதழை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக மரம் நடும் விழா



காளையார் கோவில், செப்.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் மரம் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்றார். செம்பனூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மங்கையற்கரசி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுற்றுச்சூழல் மன்ற செயல்பாடுகளை பார்வையிட்டு மரக்கன்று நட்டார். சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி பசுமை உறுதிமொழி கூற அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். நீடித்த பாதுகாப்பான நீர் மேலாண்மை குறித்த கருபொருளில் அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் சமர்பிப்பது என முடிவெடுக்கப்பட்டது. ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார். ஆசிரியை வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா மற்றும் கஸ்தூரி நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து கீழ்கட்டளையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்

# ஸ்டாலினும் திமுகவினரும் ஆடும் ஆட்டம் இன்னும் 6 மாத காலமே கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் பேசினார்



பல்லாவரம், செப்.13-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி கீழ்கட்டளை பகுதி கழகம் சார்பில் தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்கட்டளையில் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை கீழ்கட்டளை பகுதி கழக செயலாளர் ஞா.சந்திரசேகர் ராஜா செய்திருந்தார்.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.தன்சிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்துலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா, கழக மகளிர் அணி இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கனிதா சம்பத், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே. எஸ்.மலர்மன்னன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏ.எம்.பொன்னுசாமி, சரஸ்வதி ஜெய்சங்கர், வனஜா துளசிதாஸ், பி.கே. பரசுராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் சாந்தி நாகேஸ்வரன், தா.மு. துரைவேல், கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மண்டல தகவல் தொழில் நுட்ப பிரிவு இணை செயலாளர் சபரீஷ் மணிகண்டன், பகுதி, ஒன்றிய, நகர கழகச் செயலாளர்கள் த.ஜெயபிரகாஷ், பா.அப்பு என்கிற வெங்கடேசன், வெ.ஜெகநாதன், எம்.கூத்தன், எல்லார் செழியன், ஏ.கோபிநாதன், இரா.மோகன், மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன், தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சேலையூர் ஜி.சங்கர், எம்.கஜா என்கிற கஜேந்திரன், மதுரபாக்கம் எம்.பி. மனோகரன், ஜெ. சீனுபாபு, எஸ்.வளையாபதி, மாவட்ட அணிச் செயலாளர்கள் , ஜிஎஸ். புருஷோத்தமன், எம்.ஜி. கே.கோபிகண்ணன், ஜி. எம்.சாந்தகுமார், க.விஜய சங்கர், பா.காசிராஜபாண்டியன், டி.ரவி, தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய் கணேஷ், ஸ்டார் பிரபா, வாட்டர் ராஜ், சுபாஷினி புருஷோத்தமன், எம்.ஜெ. எல்.வாணி சுரேஷ் பாபு, மற்றும் கழக நிர்வாகிகள் மேலும் இந்நிகழ்ச்சியில் கே.விஸ்வநாதன், எம்.ஞானசேகரன், எம். குமார், என். பிச்சாண்டி, ஆர்.ரவிசந்திரன், வி.மனோகரன், எஸ்.சுஜாதா, டாக்டர் பிரேம்சந்த், பி.நிர்மலா, கே.அம்மணி,

டி.ராமநாதன், ஏ. கே. சிவமூர்த்தி, எல்.சரத் லோகநாதன், கே.தீனன் (எ) துரைராஜ், இ.செல்வராஜ், எம். விஜயகுமார், என்.பாலசுப் ரமணியன், எஸ். வெங்கடேசன், பி.வடிவேல், ஆர்.ரெங்கராஜன், ஆர்.செ ல்வம் எம்.ராஜசேகர், எஸ்.பிரபாகரன், ஆர்.காளி யப்பன், எம்.விஜயன்கணேசன், பொன் ஸ்ரீதர், அக்ரம் பாய், மூர்த்தி, பிரகாஷ், டி.ஆர்.ராஜேஷ், ராஜேஷ் கண்ணா, அன்பு, விஜகுமார், ஆர்.ஆனந்த், நரேஷ் குமார், ஏ.ஆனந்த், ராஜ்பரத், ராஜ்குமார், நெடுமாறன், வைத்தி, ஜெகன், தினேஷ், ரஜினி, சத்யா, ராஜ்குமார், சுகுமார், மணிகண்டன், ஜெகநாதன் சரத்குமார், ஜி. வஜ்ரவேல், ஆர். தாமரை செல்வன், என்.சத்யா,

ஆர்.கவிராசு, எஸ். விவேக், அம்பி, ஆர்.கிருஷ்ணா, எஸ். ஜெயா, கே.கார்த்திக், பி.ராஜேந்திரன், டீ.மணிமாறன், வி.பாபு, இ.ரகு, பல்லாவரம் பிரசாத், பி.வடிவேல், ஆர் .தேசிங்கு ராஜா, என்.லோகநாதன், எல்.மணிகண்டன், கே.அண்ணாமலை, எஸ்.தேவராஜ், பி.ஜெயக்குமார், எம்.கண்ணன், எஸ்.தயாளன், ஆர்.மணிக ண்டன், பி.ராஜா, டி.விநாயகம், எம்.பூங்காவனம், கே.பிரிவினா, ஆர்.கலைமதி, அலிராசா, இம்ரான், யாசர், பாஸ்கர் பி.லதா, எம்.அன்பழகி, எம்.மோனிஷா, எஸ்.ஆர்.பார்த்தசாரதி, வி.ராஜேந்திரன், சண்முகம் ஆச்சாரி, டி.ரோகிணி, சி.ஸ்டீபன்சன், மாலா, சி. கே.செல்வம் , தாமஸ் மூர்த்தி, ஏ.தயாளன், எம்.லதா, வி.ராஜேந்திரன், எஸ். சண்முகம், இ.சரவணன், பி.சேகர், பி.மாரியதாஸ், ரஜினி, சிவராமன், பி.கவிதா, கே.ராஜாராமன், எம்.சண்முகம்,சங்கர், விக்டர், இமயவர்மன் , அந்தோணி ஜான், ரூபன், மஹேந்திரன், வெண்மதி, பொன்னம்மாள், விஜயகாந்த், பிரேம்குமார், வினோத், சூர்யா தினேஷ், ஜே.கே. ஜெகன், ரவீந்திரன், எஸ்.மணிகண்டன், எஸ்.விக்னேஷ் குமார், சரவணபெருமாள், எஸ்.சுதாகர், ஆனந்த பத்மநாதன், பாபு, பொழிச்சலூர் வி.பாபு, திருநீர்மலை வடிவேலு, ராமு, சுப்பிரமணி, சுதாகர், தென்னரசு, விநாயகம், வேலு, ரவி வெங்கடேஷ், மோனிஷ் குமார், இளங்கோவன், சஞ்சய் குப்தா, பி.சந்திரசேகர், ஜார்ஜ் ஸ்டீபன், மதிச்செல்வன், ராம்ராஜ் ராமு, சுதாகர், சவுண்ட் சர்வீஸ் பாலு, ஹரிஹரன், அலெக்ஸ் மணிகண்டன், விக்னேஷ்குமார், தீபக் வினோத்சந்திரன், பிரபாகரன், பாஸ்கர், மூர்த்தி, எஸ்.விவேக், என் விஜய் எம்.மனோஜ் ஏ பிரபாகரன் கே.மதன் குமார், பி.தனுஷ், எஸ்.சதீஷ் எஸ்.மணிகண்டன் கதிர்வேல் டாக்டர் எஸ் தினேஷ், முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர், லலிதா சுரேந்திரன், ரமேஷ், செந்தில் குமார், கார்த்திக், சற்குணம், சிவா, ஹரி கிருஷ்ணன், ஜோதீஸ்வரி, இந்திரா, சித்ரா, லட்சுமி மற்றும், மாவட்ட, பகுதி, அணி நிர்வாகிகள், உட்பட திரளான கழகத்தினர் கலந்து கொண்டனர் .

கூட்ட முடிவில் என். பிச்சாண்டி நன்றியுரை ஆற்றினார்



# சாலை வசதி ஏற்படுத்தி தர பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

சிவகங்கை, செப்.13-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் மாங்குளம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட அம்பேத்கர் நகர் மூங்கில் ஊரணியில் பகுதியில் 40 ஆண்டுகளுக்கு மேலாக 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மழை காலத்தில் இந்த சாலைகள் அனைத்தும் சேறும் சகதியுமாக மாறியிருந்த நிலையில் தற்போது வெயில் அடிக்கும்போது சாலைகள் முழுக்க புழுதி கிளம்புகிறது. பிரதான சாலைகளை அமைப்பதிலும் பராமரிப்பதிலும் நெடுஞ்சாலைத்துறையிடம் பொறுப்பு இருக்கிறது. பல்வேறு சாலைகளை சீரமைக்கும் பொறுப்பில் ஊராட்சி நிர்வாகம் இருக்கிறது

இந்நிலையில் எந்த ஆட்சி வந்தாலும் இதுவரையிலும் சாலை வசதி இல்லாமல் பள்ளி குழந்தைகள் வயது முதியோர் இருசக்கர வாகனங்கள் செல்லுபவர் அனைவரும் மழைக்காலங்களில் விபத்துக்கு சூழ்நிலை உள்ளது அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உடனடியாக தார் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்..




# வேலூர் மாநகராட்சி, சேன்பாக்கம் 31வது வார்டில் தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பங்கேற்பு

வேலூர், செப்.13-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, சேன்பாக்கம், தனியார் திருமண மண்டபத்தில் கடந்த (11.09.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு சொத்து வரி மற்றும் மின் இணைப்பு பெயர் மாற்ற ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, கோட்டாட்சியர் செந்தில்குமார், மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன், வட்டாட்சியர் வடிவேலு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை சுனில்குமார், மாநகராட்சி சுகாதார அலுவலர் பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். இந்த முகாமில் வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை, வேளாண் துறை, மின்சாரத்துறை, மகளிர் உரிமைத் தொகை நலத்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பொதும க்களின் கோரிக்கை மனுக்களை இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர். பின்னர் தகுதியுடைய மனுதாரர்களுக்கு ஆவண ஆணைகளை வழங்கினர்.

# காரைக்குடியில் இரத்ததான முகாம்



காரைக்குடி, செப்.13-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நமது உரிமை பாதுகாப்பு இயக்கம் நேஷனல் ஃபயர் அண்ட் சேஃப்டி கல்லூரி மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கம் இணைந்து, உலக முதலுதவி தினத்தை முன்னிட்டு, காரைக்குடி ஃபயர் அண்ட் சேப்டி கல்லூரியில் இரத்ததான முகாம் நடத்தினர்கள்.

இந்த முகாமிற்கு நேஷனல் ஃபயர் அண்ட் சேஃப்டி கல்லூரி தாளாளர் சையது தலைமை தாங்கினார். காரைக்குடி தொழில் வணிக கழக தலைவர் சாமி திராவிட மணி, இந்திய செஞ்சிலுவை சங்க, சிவகங்கை இரத்த தான ஒருங்கிணைப்பாளர் செங்கை ராமசாமி முன்னிலை வகித்தார்கள். முன்னதாகவே கல்லூரி முதல்வர் தனசீலன் அனைவரையும் வரவேற்றார்.

இரத்த தான, விழிப்புணர்வு தொடர்பான சிறப்புரையை, நமது உரிமை பாதுகாப்பு இயக்க தலைவரும் காரைக்குடி மாமன்ற உறுப்பினருமான ஆகா பிரகாஷ் ஆற்றினார்.

இரத்த தான முகாமில் நமது உரிமை பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள் முகமது ஆசிக், ஆனந்த கிருஷ்ணன், நாகராஜ், ஜேம்ஸ், கார்த்தி, சரவணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். நிகழசியை கல்லூரி மாணவர் தொடர்பு அலுவலர் ராஜு தொகுத்து வழங்கினார். இறுதியாக இயக்க மாநகர நிர்வாக குழு உறுப்பினர் சந்திர குமார் நன்றி கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161